அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடிதம் : 01/2015

எனது இல : EST -7/LEAVE/03/3162

அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2015.04.15

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>தாபனக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 16 ஆம் பிரிவில் திருத்தம் மேற்கொள்ளல்</u>**

2014.05.19 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 09/2014 தொடர்பாக தங்களது அவதானம் ஈர்க்கப்படுகின்றது.

02. வெளிநாட்டு புலமைப்பரிசில் பெற்று, உயர் கல்வியைத் தொடர்வதற்காக வெளிநாடு செல்கின்ற அலுவலரொருவரின் அரசாங்க சேவையிலுள்ள வாழ்க்கைத் துணைவர் அல்லது துணைவிக்கும், அவ் அலுவலருடன் வெளிநாடு செல்வதற்கான உரிய ஏற்பாடுகள் மேற்படி சுற்றறிக்கையின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

03. அவ்வாறே, வெளிநாட்டு புலமைப்பரிசில் தொடர்பாக ஆயுதப்படை சேவையின் (Armed Service) அல்லது நியதிச்சட்ட நிறுவனமொன்றின் அலுவலரொருவர் உத்தியோகபூர்வமாக தெரிவு செய்யப்பட்டு, வெளிநாடொன்றுக்கு செல்லும் சந்தர்ப்பத்தில் அவ் அலுவலரின் வாழ்க்கைத் துணைவர் அல்லது துணைவி அரசாசாங்க அலுவலராயின் அவருக்கும் மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்.

ஒப்பம்/ ஜே. தடல்லகே
செயலாளர்
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு